போட்டிருக்கிறது. அது பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டதா? சர்வே செய்யப்பட்டதா? அந்த இடத்திலே என்ன அகப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய ஜியாலில் துறை நடத்திய ஆராய்ச்சியில் திருப்பத்தூர் அருகிலுள்ள சவத்தூர்-கொரட்டி கிராமங்களில் இதுபோன்ற பொருள்கள் ஓரளவுக்குக் கிடைப்பதாக ஒரு தகவல் கிடைத்தது. ஆனால் இது குப்பம் என்ற இடத்திலே என்று ஒரு தவறான தகவல் பத்திரிகையில் வெளி வந்தது. ஆனால் இந்த இடத்திலே கிடைப்பதைப்பற்றி நமக்குத் தேவையான அளவுக்கு, எக்கனாமிக்கலாக யூஸ் பண்ணக் கிடைக்குமா என்பதுபற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டியிருக் கிறது.

பல்புகள் உற்பத்தி

*** 357 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பல்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்று நடத்த அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: இல்லையென்றால், பல்புகளின் எண்ணிக்கையை அதிகமாகத் தருவதற்காக, திரும்பவும் பரிசீலித்து, இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வி, பல்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்று நடத்த அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்று. இல்லை என்று சொன்னேன். தனியார் துறையில், கல்கத்தாவிலுள்ள ஒரு கம்பெனிக்காரர், இங்கே வந்து 6 மில்லியன் பல்பு உற்பத்தி செய்யத் தொழிற்சாலைக்கு அனுமதி கேட்டிருக்கிறார். நாம் சிபாரிசு செய்து இருக்கிறோம். அண்மையில் நானும், கனம் முதலமைச்சரவர்களும், யூனியன் தொழில் அமைச்சரைப் பார்த்தபொழுது, இந்தத் தொழிற்சாலைக் குக் கூடிய விரைவிலே அனுமதி தரலாம் என்று கூறினார்கள்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கல்கத்தா நிறுவனத்தார் பல்புகள் மட்டும் உற்பத்தி செய்வதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஏனைய பொருள்களும் தமிழக மின்சார வாரியத்திற்கு இப்பொழுது தட்டுப்பாடு உள்ளது. ஆகவே, வேறு பொருள்களையும் கல்கத்தா நிறுவனத்தார் உற்பத்தி செய்து தருமாறு இந்த அரசு கேட்டுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்தெந்தப் பொருள்கள் நமக்குத் தேவையாக இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் உற்பத்தி செய்வதற்குத் தொழிற்சாலைகள் தொடங்கலாம்.

1970 மார்ச் 13]

திரு. கே. போஜன் : தற்சமயம் மின்சார வாரியம் நிர்வகித்து வரும் கிராமப் பகுதிகளில் உள்ள சாலைகளிலும், வீதிகளிலும் உள்ள விளக்குகள் அடிக்கடி கெட்டுப் போகின்றன. காரணம், வெளி மாநிலங்களிலிருந்து வாங்கும் பல்புகள் நல்ல தரம் உள்ளவைகள் அல்ல என்று கூறப்படுகிறது. ஆதலால் நம்முடைய அரசாங்கம் தனியாக மின்சாரத் துறையில் பல்புகள் உற்பத்தி செய்யும் பாக்டரி ஒன்றை நிறுவி, அதன் மூலம் நல்ல தரமான பல்புகளை உற்பத்தி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஸ்குரூ பல்புகள் கிடைக்கவில்லை என்பதுதான் இதற்குக் காரணம். அந்த பல்புகள் இப்பொழுது பங்களூரில் செய்கிறார்கள். அதை இங்கேயே செய்ய வேண்டும் என்று ஒரு முயற்சி எடுத்து, மின்சார வாரியத்தின் மூலம் இதற்கான ஆராய்ச்சி நடத்தப்பட்டது. மின்சார வாரியத்திற்குத் தேவையான ஒரு லட்சம் பல்புகள் உற்பத்தி செய்வதற்கு மட்டும் ஒரு தொழிற்சாலையை நடத்த முடியாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆகவே, மேற்கு வங்காளத்தில் கல்கத்தாவிலுள்ள தொழிற்சாலையின் ஒரு பகுதியாக இங்கே ஒரு தொழிற்சாலையைத் தொடங்கினால், அவர்களை பல்புகள் உற்பத்தி செய்யக்கூடிய முயற்சியை எடுக்கச் சொல்லலாம் என்ற எண்ணம் அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

இளையாங்குடி ஊராட்சி ஒன்றியத்துக்கு சாலை வசதிகள்

* 358 வினு—**திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதை வசதியே இல்லாத இளையாங்குடி ஊராட்சி ஒன்றியத்தில், பாதை வசதி செய்யும் பொருட்டு, சுமார் 18 லட்ச ரூபாய்க்கு (Master Plan(சிறப்புத் திட்டம் தீட்டி, சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன் தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டதா ?

(இ) அத் திட்டத்தை மத்திய அரசு உதவியோடு செயல் படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஆம். கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாலைகள் இளையாங்குடி ஒன்றியத்திலுள்ள சாலைகள் உள்ளிட்ட மேம்பாட்டிற்கென 1967-ல் நெடுஞ்சாலைத்துறைத் தலைமைப் பொறியாளர் ரூ. 1 கோடி செலவில் ஒரு சிறப்புத் திட்டம் தீட்டி அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினர். செலவு அதிகமானதாலும் நிதி பற்றாக்குறை காரணமாகவும் மேற்படி திட்டம் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் படவில்லை. ஆனல் நிதிநிலையைப் பொறுத்தும் பல்வேறு திட்டங்களின் முதன்மையையும் தாராதா அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டும் மேற்படி பகுதி மக்களின் தேவைகள் பரிசீலிக்கப்பட்டு அவ்வப்போது அரசு ஒப்பளிக்கும் திட்டங்களில் சேர்க்க அரசு வகை செய்யும்.